எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம்,
110, அண்ணாசாலை, சென்னை–2.

ஆணையரக . எண்.க்யூ4/28329/2026 நாள்: 06.10.2025

2027–ஆம் ஆண்டு நாட்காட்டிகளின் விளிம்பு–ஒட்டும் (Rimming) பணிக்கான வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி

2027–ஆம் ஆண்டிற்கான நாட்காட்டிகளின் விளிம்பு–ஒட்டும் (Rimming) பணிக்கு உறையிடப்பட்ட (Sealed Cover) வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தமிழ்நாடு ஆளுநர் சார்பாக எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் பொது மேலாளர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி மற்றும் பணி விவரம்

1.	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பொதுமேலாளர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
2.	ஒப்பந்தப்புள்ளி ஏற்பு அலுவலர்	ஆணையர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
3.	ஒப்பந்தப்புள்ளி எண்.	க்யூ4/28329/2026
4.	பணி விவரம்	இணைப்பு–1 இல் கொடுக்கப்பட்டுள்ளது
	2027 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டிகளுக்கு விளிம்பு – ஒட்டும் (Rimming) பணி	
5.	பணி மேற்கொள்ளப்படவேண்டிய இடம்	அரசு மைய அச்சகம், சென்னை– 600 001
6.	முன்வைப்புத் தொகை	மொத்த தொகையில் ஒரு விழுக்காடு
7.	முன்–ஏலக்கூட்ட நாள்	12.11.2026 மு.ப.11.00 மணி
8.	ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான இறுதி நாள் மற்றும் நேரம்	20.11.2026 பி.ப. 3.00 மணி
9.	ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள் மற்றும் நேரம்	20.11.2025 பி.ப. 3.30 மணி

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்

நிபந்தனைகள் (ம) வரையறைகள்:

I. ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்பதற்கான முறைகள் மற்றும் நிபந்தனைகள்:

'இரு-உறை (Two-Cover bidding system) முறையிலான வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

a. தொழில்நுட்ப உறை (உறை-'அ').

தொழில்நுட்ப உறையில் அளிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்.

i. ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் (இவ்வொப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் கீழே iii முதல் v வரை குறிப்பிட்டுள்ள ஆவணங்களின்) அனைத்து பக்கங்களிலும் நிறுவனத்தின் முத்திரையுடன் கையொப்பம் இடப்பட வேண்டும்.
All pages of Tender Document (This Tender Document and documents mentioned below from iii to vii) should be **Signed with Seal of the Bidder**.

ii. முன்வைப்புத் தொகை செலுத்தியதற்கான **மின்னணு பற்றுச்சீட்டு (E-Challan)** அல்லது அச்சு மற்றும் தபால் உறைகள் ஓட்டும் பணிகள் தொடர்பான சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கான NSIC/Aadhaar Udyog/UDYAM Certificate.

iii. சரக்கு மற்றும் சேவை வரி பதிவுச்சான்று.(**GST Registration Certificate**)

iv. வருமான வரிச்சான்று (**IT Returns**, Financial Year 2023-2024, 2024 - 2025 & 2025 - 2026) (Financial Year)

v. அரசு/அரசு சார் நிறுவனங்களால் ஒப்பந்தப்புள்ளிதாரரின் வணிக நடவடிக்கைகளை தடை செய்யப்படாமைக்கான சான்று (**Not Blacklisted Certificate**).

vi. Pan Card

vii. Cancelled Cheque Leaf

மேற்குறிப்பிட்ட ஆவணங்களைக் கொண்ட இவ்வுறையின் மேல் "2026-ஆம் ஆண்டு நாட்காட்டிகளின் விளிம்பு-ஒட்டும் (Rimming) பணிகளைமேற்கொள்வதற்காக ஒப்பந்ததாரரை தேர்வு செய்யும் வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கான தொழில்நுட்ப உறை" என எழுதப்பட வேண்டும்.

தொழில்நுட்ப உறையில் கோரப்பட்ட ஆவணங்களை முழுமையாகவும் முறையாகவும் அளிக்காத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

b. <u>விலைப்புள்ளி உறை (உறை–'ஆ')</u>

விலைப்புள்ளி உறையில் அளிக்க வேண்டிய ஆவணங்கள்.

i. விலைப்புள்ளி (Price Quotation) மட்டுமே இவ்வுறையில் அளிக்கப்பட வேண்டும்.

a) <u>இணைப்பு–2 இல் இணைக்கப்பட்டுள்ள விலைப்புள்ளி படிவத்தின்படி விலை விவரம் அளிக்கவேண்டும்.</u>

b) ஒப்பந்தப்புள்ளிதாரர்கள், தங்கள் சொந்த நிபந்தனைகள், விநியோக விதிமுறைகள் போன்றவற்றை மேற்கோள் காட்ட வேண்டாம் என குறிப்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

c) விலைப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்கு நிலையானதாகும்.

d) சரக்கு மற்றும் சேவை வரியை தனியாக பிரித்து குறிப்பிட வேண்டும்.

e) ஒப்பந்தம் நடைமுறையில் உள்ள காலத்தில் ஒப்பந்தப்புள்ளியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலையின் அடிப்படையிலேயே பட்டியல்கள் தீர்வு செய்யப்படும். சரக்கு மற்றும் சேவை வரியில் ஏற்படும் மாற்றங்களை தவிர்த்து விலையில் மாற்றம் செய்யக் கோரும் எவ்வித கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

f) 2026–ஆம் ஆண்டு நாட்காட்டிகளின் விளிம்பு–ஒட்டும் (Rimming) பணிகள் தொடர்பான கூடுதல் விவரங்களை பெறுவதற்கு பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–01 அவர்களை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வுறையின் மேல் 2026–ஆம் ஆண்டு நாட்காட்டிகளின் விளிம்பு–ஓட்டும் (Rimming) பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்ததாரரை தேர்வு செய்யும் வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கான விலைப்புள்ளி உறை" என எழுதப்பட வேண்டும்.

c. ஒப்பந்தப்புள்ளி உறை (உறை–' இ')

பெரிய அளவிலான இவ்வுறையின் உள்ளே 'அ' & ' ஆ' ஆகிய இரு உறைகளையும் வைத்து அனுப்பப்பட வேண்டும். இவ்வுறையின் மேல் ' 2026–ஆம் ஆண்டு நாட்காட்டிகளின் விளிம்பு–ஓட்டும் (Rimming) பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்ததாரரை தேர்வு செய்வதற்கான வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உறை–இ' என்று மேலெழுதப்பட வேண்டும். ஒவ்வொரு உறையும் தனித்தனியாக ஒட்டப்பட வேண்டும்.

II. ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்பதற்கான நிபந்தனைகள்

1. " முன்வைப்புத் தொகை (Earnest Money Deposit):–

i. அனைத்து ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையை https://www.karuvoolam.tn.gov.in வலைதளத்தில் பின்குறிப்பிட்டுள்ள அரசுக்கணக்கில் செலுத்தி அதற்கான மின்னணு பற்றுச்சீட்டினை (e–Challan) இணைக்கவேண்டும். முன்வைப்புத் தொகையை செலுத்துவதற்கான வழிமுறைகள் இணைப்பு–3இல் கொடுக்கப்பட்டுள்ளது.

8443 00 Civil Deposit–deposit not bearing Interest –
103 Security Deposit–EMD
DPC 8443 00 103 AA 0001 (R)
(NewIFHRMS Code 8443 00 103 AA 801 02)

2. குறிப்பிட்ட முன்வைப்புத் தொகை செலுத்தியதற்கான மின்னணு பற்றுச்சீட்டினை (e–Challan) இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

3. சிறு குறு தொழில் நிறுவனங்கள் முன்வைப்பு தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு கோரப்படும் நிலையில், உரிய பதிவு சான்றுகளை (NSIC/Aadhaar Udyog/UDYAM Certificate) இணைத்தனுப்ப வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியிலிருந்து விலகினால் முன்வைப்புத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது.

5. ஒப்பந்தப்புள்ளியின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் மற்றும் நிறுவனத்தின் முத்திரை இடப்பட வேண்டும், தவறும் பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

6. ஒப்பந்தப்புள்ளியில் தேர்வாகாத நிறுவனங்களின் முன் வைப்புத்தொகைகள் எவ்வித வட்டியும் இல்லாமல் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முடிவுற்றவுடன் திரும்ப வழங்கப்படும்.

III. மாதிரிகள்

1. வண்ண தகரத் தகடு, பட்டுக் கயிறு, பசை உட்பட விளிம்பு-ஒட்டும் பணிக்கு தேவைப்படும் அனைத்து நுகர்பொருட்களின் மாதிரிகள் 20.11.2025 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை-2-க்கு வந்தடைய வேண்டும்

2. நாட்காட்டி தாள்களின் மாதிரிகளை பார்வையிடுவதற்கு, மேலாண்மை குறிக்கோள் ஆலோசகர், 110, அண்ணா சாலை, எழுதுபொருள் (ம) அச்சுத்துறை ஆணையரகம், சென்னை-02-ஐ வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணிக்குள் அணுகவும்.

IV. பணிகளை முடிப்பதற்கான கால அளவு

1. இவ்வலுவலக பணியாணையில் நிர்ணயிக்கும் நாட்களுக்குள், ஒப்பந்தம் தொடர்பான அனைத்து பணிகளையும் செய்து முடித்திட வேண்டும்.

2. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை முடிப்பதற்கு ஆகும் குறைந்தபட்ச நாட்களை ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட வேண்டும். இஃது ஒப்பந்தப்புள்ளிகளை கருத்திற்கொள்வதற்கான முக்கிய காரணியாகும்.

3. நாட்காட்டிகளின் விளிம்பு-ஒட்டும் பணிக்கு தேவைப்படும் நாட்காட்டி தாள்கள் மட்டுமே இத்துறையினால் வழங்கப்படும். நாட்காட்டி தாள்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து பொருட்களையும் (வண்ண தகரத் தகடு, பட்டுக் கயிறு, பசை உட்பட) ஒப்பந்ததாரர்கள் அவர்களது சொந்த செலவில் கொள்முதல் செய்து கொண்டுவரவேண்டும். மேலும் ஒப்பந்தாரர்கள் இப்பணியை மேற்கொள்வதற்கான போதிய பணியாட்களை பணியமர்த்த வேண்டும்.

V. பணிகளை முடிப்பதில் சுணக்கம் ஏற்படின் முதல் 10 நாட்களுக்கு ஒரு நாளுக்கு ரூ.50/- வீதமும் அதன்பிறகு ஒரு நாளுக்கு ரூ.100/- வீதமும் அதிகபட்சமாக 30 நாட்களுக்கு தண்டத் தொகை விதிக்கப்படும். 30 நாட்களுக்கு மேற்படின் அவ்வொப்பந்தம் நிராகரிக்கப்பட்டு பணியாணை இரத்து செய்யப்படும்

VI. விலை:

1. ஒரு நாட்காட்டியின் விளிம்பு-ஒட்டும் பணிக்கான விலையை (அனைத்து நுகர்பொருட்களுக்குண்டான செலவு மற்றும் விளிம்பு-ஒட்டும் பணிக்கான செலவையும் சேர்த்து) குறிப்பிடவேண்டும். நுகர்பொருட்களின் விலைகளை தனித்தனியாக குறிப்பிடக்கூடாது.

2. ஒப்பந்தப்புள்ளிதாரர்கள், தங்கள் சொந்த நிபந்தனைகள், விநியோக விதிமுறைகள் ஏதும் விலைப்புள்ளியுடன் குறிக்கக்கூடாது.

3. சரக்கு மற்றும் சேவை வரியை தனியாக பிரித்து குறிப்பிட வேண்டும்.

4. விலைப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் குறைந்தபட்சம் 6 மாத காலத்திற்கு செல்லத்தக்கதாகும்.

VII. பிணையத் தொகை :

1. ஒப்பந்தப்புள்ளியில் தேர்வாகும் ஒப்பந்தப்புள்ளிதாரர், தேர்வு செய்யப்பட விவரம் தெரிவிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் பணியின் மொத்த **மதிப்பில் 5% விழுக்காட்டுத்தொகையை பிணையத் தொகையாக** https://www.karuvoolam.tn.gov.in வலைதளத்தில் பின்குறிப்பிட்டுள்ள அரசுக்கணக்கில் செலுத்தி அதற்கான மின்னணு பற்றுச்சீட்டினை (e-Challan) அளிக்கவேண்டும். பிணையத்தொகையை செலுத்துவதற்கான வழிமுறைகள் இணைப்பு-3இல் கொடுக்கப்பட்டுள்ளது.

8443 00 Civil Deposit–deposit not bearing Interest –
103 Security Deposit–EMD
DPC 8443 00 103 AA 0001 (R)
(NewIFHRMS Code 8443 00 103 AA 801 02)

2. பிணையத் தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிதாரரின் முன்வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படாது.

VIII. பணியாணை:

1. இவ்வொப்பந்தகாலத்தில் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் தேவைக்கேற்ப 2026-ஆம் ஆண்டு நாட்காட்டிகளின் விளிம்பு-ஒட்டும் (Rimming) பணிகளை மேற்கொள்வதற்கு பணியாணை வழங்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்

2. பணியாணை கிடைக்கப்பெற்றவுடன் அரசு மைய அச்சகத்தில் 2026-ஆம் ஆண்டு நாட்காட்டிகளின் விளிம்பு-ஒட்டும் (Rimming) பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர் போதுமான பணியாட்களை தயார்நிலையில் வைத்திருத்தல் அவசியம்.

IX. ஒப்பந்தம்:

1. பணியாணை வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் இத்துறையினால் குறிப்பிடப்படும் வடிவத்தில் ரூ.200/-க்கான வில்லை ஒட்டிய தாளில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்த படிவம் அளிக்க வேண்டும்.

2. ஒப்பந்தப்படிவம் அளிக்க தவறும் ஒப்பந்ததாரரின் பிணையத் தொகை பறிமுதல் செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படும்.

X. சிறப்பு நிபந்தனைகள்:

1. இவ்வொந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்காட்டிகளின் எண்ணிக்கை தோராயமானதாகும். தேவையை பொறுத்து குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை விட இருபத்தைந்து விழுக்காடு (25%) அளவிற்கு மிகுதியாகவோ அல்லது குறைவான எண்ணிக்கைக்கோ பணியாணை வழங்கப்படும்.

2. நாட்காட்டிகளின் எண்ணிக்கையை உயர்த்தவோ அல்லது குறைக்கவோ எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

3. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் அவர்களுக்கு எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியையும் எவ்வித காரணமும் தெரிவிக்காமல் நிராகரிப்பதற்கு அதிகாரம் உண்டு.

4. ஒப்பந்தப்புள்ளியில் தேர்வாகும் ஒப்பந்ததாரர் மேற்குறிப்பிட்டுள்ள பணியின் ஒரு பகுதியையோ அல்லது பணி முழுவதுமாகவோ வேறொரு நபருக்கோ அல்லது வேறொரு நிறுவனத்திற்கோ மாற்றக்கூடாது.

5. நாட்காட்டிகளின் விளிம்பு-ஒட்டும் (Rimming) பணி முடிக்கப்பட்ட ஒரு நாட்காட்டி மாதிரியை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளரிடம் காண்பித்து ஒப்புதல் பெற்ற பிறகே ஒப்பந்தப்பணியினை மேற்கொள்ள வேண்டும். ஒப்பந்தப்பணி முடிந்த பிறகு, ஒப்புதல் பெறப்பட்ட நாட்காட்டி மாதிரியின் தரத்தில் இல்லாத நாட்காட்டிகள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்

6. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள பணி முழுவதும் அரசு மைய அச்சகம், சென்னை-01ல் நடைபெறும் என்பதால் இப்பணியை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் ஒப்பந்ததாரரே செய்துகொள்ள வேண்டும்.

XI. பட்டியல் தொகை தீர்வு:

1. பணியாணை மற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் பணிகளை முழுமையாக முடித்த பிறகே அவற்றிற்கான பட்டியல்கள் ஏற்று தீர்வு செய்யப்படும்.
2. பணியினை தரமாக செய்து முடித்து பணியாணையில் குறிப்பிடப்படும் நாளிற்குள் நாட்காட்டிகளை ஒப்படைக்க வேண்டும்.
3. பணியினை மேற்கொள்வதற்காக முன்பணம் வழங்கப்பட மாட்டாது.
4. இப்பணிக்கான பட்டியலின் பின்புறத்தில், பணி மேலாளர் அவர்களால் 'பணியினை தரமாக முடித்ததற்கான சான்றிட்டு' பெறப்பட்ட பின்னரே பட்டியலானது தீர்வு செய்யப்படும்.

XII. ஒப்பந்த விதி மீறல்:

1. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது பலவற்றையோ ஒப்பந்தப்புள்ளிதாரர் கடைபிடிக்க தவறினாலோ அல்லது நிறைவேற்ற மறுத்தாலோ அவரால் வழங்கப்பட்ட முன்வைப்புத்தொகை மற்றும் பிணையத் தொகை பறிமுதல் செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படும்.
2. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் முழு திருப்திக்கிணங்க ஒப்பந்தப்பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
3. நாட்காட்டிகளின் விளிம்பு-ஒட்டும் பணி முடித்து ஒப்படைக்கப்பட்ட நாட்காட்டிகளில் எவையேனும் பணி மேலாளர் அவர்களால் நிராகரிக்கப்பட்டால், ஒப்பந்ததாரர் அவற்றினை பெற்று தரமான முறையில் மீண்டும் விளிம்பு ஒட்டும் பணி செய்து ஒப்படைக்கவேண்டும் அவற்றினை ஒப்பந்ததாரரால் உடனடியாக அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
4. பணி மேலாளர் அவர்களால் நிராகரிக்கப்பட்ட நாட்காட்டிகளை மீண்டும் விளிம்பு ஒட்டும் பணி மேற்கொள்ளப்பட்டும் நேர்வில் அதற்கான கூடுதல் தொகை கோரக்கூடாது.

5. பணி மேலாளர் அவர்களால் நிராகரிக்கப்பட்ட நாட்காட்டிகளை மீண்டும் விளிம்பு ஒட்டும் பணி மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் வெளி ஆதார முறையில் அப்பணியினை மேற்கொண்டு அவற்றிற்கான செலவினையும் அதனால் ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகையும் ஒப்பந்ததாரரின் பட்டியலிலிருந்து/ பிணையத்தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

6. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் முழு திருப்திக்கிணங்க ஒப்பந்தத்தை நிறைவேற்றியவுடன் ஒப்பந்ததாரரின் முன்வைப்புத் தொகை மற்றும் பிணையத் தொகை விடுவிக்கப்படும்.

XIII. அதிகார வரம்பு (ம) முறையீடு:

1. ஒப்பந்தம் செயலாக்கத்தில் இருக்கும்போது ஒப்பந்தப்புள்ளி விதிகள் குறித்தான உரிமைகள், கடமைகள், பொறுப்புகள் மற்றும் அது தொடர்பாக எழும் வேறுபாடுகள், தகராறுகள் மீது முடிவெடுக்கும் இறுதி அதிகாரம் சம்பந்தப்பட்ட துறையின் அரசு செயலாளருக்கே உள்ளது. மேலும், அவரின் முடிவு ஒப்பந்தத்தின் இருதரப்பினரையும் கட்டுப்படுத்தும்.

2. ஒப்பந்தம் தொடர்பாக எழும் குறைபாடுகள், வேறுபாடுகள், தகராறுகள் அனைத்தையும் விசாரித்து தீர்ப்பளிப்பதற்கு சென்னையில் உள்ள நீதிமன்றங்கள் மற்றும் ஆணையங்களில் மட்டுமே முறையீடு செய்யப்பட வேண்டும்.

3. ஒப்பந்தம் தொடர்பாக எழும் குறைபாடுகள், வேறுபாடுகள், தகராறுகள் அனைத்தையும் விசாரிப்பதற்கு முழு அதிகாரமும் சென்னையில் உள்ள நீதிமன்றங்கள் மற்றும் ஆணையங்களுக்கு மட்டுமே உண்டு.

6/11/2026

பொது மேலாளர்.
(ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்)

06/11/26

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்

இணைப்பு – 1

2026–ஆம் ஆண்டு நாட்காட்டிகளின் விளிம்பு–ஓட்டும் (Rimming) பணி மற்றும் பொருள் விவரம்

வ.எண்.	பணி விவரம்	எண்ணிக்கை
ஜனவரி 2026 முதல் டிசம்பர் 2026 வரைக்கான மாத நாட்காட்டி 12 தாட்கள் Rimming with Silk Thread செய்து 25 எண்ணிக்கைகள் கொண்ட பண்டல்களாக கட்டி வழங்க வேண்டும். 12 தாள்களை கொண்ட நாட்காட்டிகளின் (2026) மேல் விளிம்பு பகுதியை 32 (gauge) 45 செ.மீ அளவு வண்ண தகரத் தகடுகளால் இணைத்தல் மற்றும் நாட்காட்டியை தொங்க விட ஏதுவாக வலுவான பட்டு வளையம் இணைத்தல்.		
1.	Foreign Real Art paper 100 GSM 45.5 x 58 cm அரசு மைய அச்சகம், சென்னை–1.	55,000
2.	Foreign Real Art Paper 130 GSM 45.5 x58cm அரசு மைய அச்சகம், சென்னை–1	5,000

6/11/2026

பொது மேலாளர்.
(ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்)

06/11/26

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்

இணைப்பு-2

விலைப்புள்ளி படிவம் (தொகுதி-I)

வ. எண்.	விவரம் (வகை மற்றும் அளவு)	பணி விவரம்	விலை (Excluding GST)	GST (in %)
1.	Foreign Real Art paper 100 GSM (45.5 x 58 cm) அரசு மைய அச்சகம், சென்னை-1.	ஜனவரி 2026 முதல் டிசம்பர் 2026 வரைக்கான மாத நாட்காட்டி தாட்கள் Rimming with Silk Thread செய்து 25 எண்ணிக்கைகளைக் கொண்ட பண்டல்களாக கட்டி வழங்க வேண்டும்.	ரூ.	
2.	Foreign Real Art Paper 130 GSM (45.5 x 58 cm) அரசு மைய அச்சகம், சென்னை-1		ரூ.	
மொத்தம்			ரூ.	

6/11/2025

பொது மேலாளர்.
(ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்)

6/11/25

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம் முத்திரையுடன்